



மாத இதழ்

# சர்வோதயம் மலர்கிறது

காந்தியப் பார்வையில் சமூகம், பொருளாதாரம், அரசியல்

மலர்: 12 இதழ் : 5 ஆகஸ்ட் 2018 விலை : ரூ.20





**திரு.உறுமத்தான் அவர்களுக்கு குன்றக்குடி அடிகளார் சேவா சிரோமணி விருது அளித்தார்**

# திரு. உறுமத்தான் அவர்களுக்கு சேவா சிரோமணி விருது

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வழங்கினார்

'பாதைகள் அனைத்தும் ரோமாபுரியை நோக்கியே' என்ற ஆங்கில பழமொழி ஒன்று உண்டு. அதே போல *28.6.2018* வியாழக் கிழமையன்று மாலை *4* மணிக்கெல்லாம் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு எதிர்ப்புறம் உள்ள ஏ.எம்.கே. மஹாலை நோக்கி எல்லாப் பாதைகளும் சென்றன என்று கூறலாம். ஏன் இப்படி அந்த மஹாலை நோக்கி மக்கள் திமுதிமு என்று செல்கிறார்கள் என்பதைப் பார்த்தால், அங்கு சர்வோதய அன்பர் திரு. அ. உறுமத்தான் அவர்களுக்குப் பாராட்டு விழா நடக்கிறது என்பதால்தான். தமராக்கி, இடையமேலூர், சிவகங்கையைச் சுற்றியுள்ள கிராமங்கள் சிவகங்கை நகரைச் சேர்ந்த வணிகர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள் என்று நூற்றுக்கணக்கில் நான்கு மணியளவிலே அந்த மஹால் நிரம்பி வழிந்தது. மாலை 4 மணிக்கு விழா ஆரம்பமாக இருந்தாலும் பாராட்டுரை வழங்கி சிறப்புரையாற்ற ஒத்துக்கொண்டிருந்த தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மாலை 6 மணிக்குத்தான் வந்தார்கள். திரு. அ. உறுமத்தான் அவர்களுக்கு விழாக்குழு சார்பாக சர்வோதயம் மற்றும் கிராம வளர்ச்சியில் அரும்பணியாற்றியமைக்காக விழாக்குழு சார்பாக சேவா சிரோமணி என்ற விருதை அடிகளார் வழங்கி சிறப்புச் செய்தார். விருதினை வழங்கும் பொழுது மேடையில் உள்ள அனைவரையும் பக்கத்தில் வந்து நிற்குமாறு அடிகளார் கேட்டுக் கொண்டார். காந்திய தொண்டுள்ளம் கொண்டு சர்வோதய வழியில் நன்மை, தீமை சுகம், துக்கம் இவைகளை சமமாக பாவித்து விருப்பு, வெறுப்புகளை ஒதுக்கி வைத்து அகிம்சை, தீண்டாமை, மதுவிலக்கு ஆகியவற்றை காந்திய நெறி அடிப்படையில் ஈடுபடுத்திக் கொண்டவர்தான் உறுமத்தான் என்று புகழாரம் சூட்டினார்கள். மேலும், அவர் கூறுகையில், "தமிழர்கள் தனக்கு வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்று காந்திஜி குறிப்பிட்டுள்ளார். தமிழ் மீதும், தமிழர்கள் மீதும் அவருக்கு மதிப்பும், பிரியமும் இருந்தது" என்று குறிப்பிட்டார். தென்னாப்பிரிக்காவில் தன்னை அகிம்சை போராளியாக்கியவர்கள் தமிழர்கள்தான் என்று காந்தியடிகள் கூறுகிறார். என் உடன்பிறப்புகளாக தமிழர்களைக் கருதுகிறேன் என அடிகள் கூறினார். காந்தியடிகள் சுற்றுப் பயணம் மேற்கொள்கையில் வீதி எங்கும் குப்பைகள் நிறைந்திருப்பதை காண்கிறார். அப்பொழுது நிருபர்



ஒருவர், காந்தியடிகளிடம் நீங்கள் ஒருநாள் வைஸ்ராயாக இருந்தால், என்ன பணி மேற்கொள்வீர்கள்? என்று கேட்டார். அதற்கு துப்புரவுப் பணியைத் தான் மேற்கொள்வேன் என்று காந்தியடிகள் கூறினார். மனித குலத் தொண்டுதான் சாதி, சமயங்களைக் கடந்து நீடித்து நிற்கும் என்று கூறினார். உயிர் போகும் நிலையில் இருந்த 40 உயிர்களைக் காத்த மகத்தான தொண்டு செய்த திரு. அ. உறுமத்தான் அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன் என்று குன்றக்குடி அடிகளார் கூறினார்.

"ஒரு கிராமத்தில் உள்ள குடிசைகளில் தீ பிடிக்கத் தொடங்கியது. அறிஞர் குழுவிடம் காந்தியடிகள் அதற்கான காரணத்தைக் கண்டறியுமாறு கூறினார். அதனை ஆய்வு செய்த அறிஞர் குழு, சமூக விரோதிகள் இரவு நேரங்களில் குடிசைகளில் ரசாயனத்தைத் தடவி செல்கின்றனர். சூரிய ஒளிபட்டவுடன் ரசாயனம் தீப்பிடிக்கிறது என்று கூறி எங்கள் வேலை முடிந்துவிட்டது நாங்கள் கிளம்புகிறோம் என்று அறிஞர் குழு கூறியது. நில்லுங்கள். இப்பொழுதுதான் உங்கள் வேலை ஆரம்பமாகிறது என்று காந்தியடிகள் கூறினார். குடிசை எரிந்ததற்கான காரணத்தைக் கூறிவிட்டீர்கள். அந்தக் குடிசைக்குள் உள்ள அடுப்புகள் எரியவில்லையே அதற்கான காரணத்தை கண்டறியுங்கள் என்று காந்தியடிகள் கூறினார்."

"குன்றக்குடி அருகில் உள்ள ஒரு கிராமத்திற்கு ஆடு வாங்க சென்ற அறிஞர் ஒருவர், ஒரு ஆட்டுதொழுவத்திற்குச் சென்றார். ஆட்டு தொழுவம் அமைத்திருந்த இளைஞனைப் பார்த்து உங்கள் தொழுவத்தில் எத்தனை ஆடுகள் இருக்கின்றன என்று என் கணினியில் பார்த்துச் சொல்லவா என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன் சரி என்றார். கணினியிலிருந்து ஒரு ரசீதை எடுத்துக் கொடுத்தார் அறிஞர். அதற்கு அந்த இளைஞன், என்னைத் தூக்கத்தில் உசுப்பி மந்தையில் எத்தனை ஆடுகள் உள்ளன என்று கேட்டால் கூட நான் பதில் சொல்லி விடுவேன். அதற்கு கணினியைப் பார்க்க வேண்டிய அவசியமிலலை. நீங்கள் என்னிடம் வாங்கிய ஆடு என்று நினைத்து நான் வளர்த்த நாயை தூக்கிச் செல்கிறீர்கள். அதை இறக்கி விடுங்கள் என்று கூறினார். இதன் காரணமாகவே குன்றக்குடி 1982இல் இந்தியாவின் நாடாளுமன்றத்தில் இந்திராகாந்தி அவர்களால் குன்றக்குடி மாடல் கிராமம் என்று சொல்லப்பட்டது. காந்தியடிகளின் பாதையில் ஒரு நல்ல தொண்டனாக திரு. உறுமத்தான் அவர்கள் செயல்படுகிறார். இன்றைய தொண்டனே நாளைய தலைவன்" என்று அடிகளார் கூறினார். மேலும் அடிகளார் பேசியதாவது :

"தென்னாப்பிரிக்காவிற்கு வக்கீல் தொழில் செய்து பிழைக்க நான் சென்றேன். அங்கு தமிழர்கள் என்னைப் போராளியாக மாற்றினார்கள். தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் இளம் வயது 16வயதுப் பெண்மணி. இனவெறி, தொழிலாளர் அடிமை இவற்றிற்காக என்னுடன் சேர்ந்து பணியாற்றி பலமுறை சிறை சென்று மெலிந்து இறக்கும் தருவாயில் காந்திஜி வள்ளியம்மையைப் பார்த்து கூடவே இருந்து வைத்திய உதவி செய்து, நீ மெலிவுற்று இருப்பதற்கும், இறக்கும் தருவாயில் இருப்பதற்கும் நானே காரணம் என்று காந்தியடிகள் உருக்கத்தோடு கண்ணீர் மல்கக் கூறினார். நான் மக்களுக்காக தங்கள் தலைமையில் போராடினேன். சாவை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்கிறேன். இன்னொரு பிறவி இருந்தால் தங்களது மகளாகப் பிறப்பேன் என்று தில்லையாடி வள்ளியம்மை கூறினார். காந்தியடிகள் மன உருக்கத்தோடு தமிழ் மீதும், தமிழர் மீதும் அதிகப் பற்றுடையவராக, தமிழ் கற்கத் தொடங்கினார். இதுபோலப் பல்வேறு தியாகிகள் தென்னாப்பிரிக்காவில் (தமிழர்கள்) காந்திஜி நடத்திய போராட்டங்களுக்கு உறுதுணையாக இருந்தனர்."

ஒரு டம்ளரில் தண்ணீரும், ஒரு டம்ளரில் மதுவை ஊற்றி இரண்டிலும் ஒரு புழுவை விட்டபோது மதுவில் உள்ள புழு இறந்துவிட்டது. மதுவை அருந்துவதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு எல்லாத் துன்பத்திற்கும்

ஆளாகி இறுதியில் உயிரை விடும் நிலை ஏற்படும். ஆகவே மதுவை அருந்த வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

பிற்பகல் 4 மணிக்கே ஆரம்பித்த விழாவுக்கு வந்திருந்தவர்களை திரு. கே. ஜவஹர் சொற்பொழிவாளர்கள் அனைவரையும் வரவேற்று சால்வை போர்த்தினார்கள். நல்ல தொண்டு செய்கின்றவர்கள் பாராட்டப்படாமல் விட்டு விட்டால் அவர்கள் தொண்டு பற்றியும் அவர்களைப் பற்றியும் வெளியில் தெரியாமல் போய் விடுகிறது. இந்த நிலையைத் தவிர்ப்பதற்காகவே உறுமத்தான் அவர்களுக்கு இந்தப் பாராட்டு விழா என்று வரவேற்புரையில் ஜவஹர் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த பேராசிரியர் நா. தர்மராஜன் தனது தலைமை உரையில், சிவகங்கையில் படித்தவர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், கிராமப் பகுதியில் உள்ளவர்கள் ஆகியோர் உறுமத்தான் அவர்களின் பாராட்டு விழாவிற்கு வந்திருப்பதே பெரிய பாராட்டாகும். எளிமையான முறையில் எல்லோரிடமும் உரிமையாகப் பழகும் சுபாவம் உடையவர் உறுமத்தான். கிராமத்துக்காரர்கள் ஏதாவது பிரச்னை என்று அவரை வந்து பார்த்தால் அரசு அலுவலகங்களில் அவர்களுக்கானப் பணிகளை இணக்கமான முறையில் செய்து கொடுப்பதில் அவர் கைதேர்ந்தவர் என்று தலைவர் கூறினார். வழக்கறிஞர் திரு. அ. சோமசுந்தரம், கதர்ச் சட்டை அணிந்து எளிமைக்கும் எளிமையான வகையில் உறுமத்தானின் நடை, உடை, பாவனைகள் இருப்பதை புகழ்ந்து பேசினார். இவருடைய சேவைக்காக இவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றார். வழக்கறிஞர் சி. இளங்கோவன் அவர்கள் பேசும்பொழுது உறுமத்தான் காங்கிரஸ் பேரியக்கத்திலும், காந்தியத்திலும், சர்வோதயத்திலும் இணைந்து செயலாற்றினார் என்று கூறினார்.

“உறுமத்தான் அவர்கள் எளிமையான தொண்டர். சர்வோதயத் தலைவர்களிடம் இணக்கமாகப் பழகி, கொள்கை அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருப்பவர். பூமிதான இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு முழுமையாகப் பணியாற்றி வாழ்நாள் சாதனையாளராக திகழ்கிறார். இவர் இந்தச் சேவை செய்வதற்கு முழுக் காரணம், இவருடைய பெரியப்பா என்று அறிகிறேன். மது அருந்துபவர்களை மாற்றி அவர்களுக்கு மறுவாழ்வுக் கொடுப்பதற்காக ஒரு மையத்தை அமைத்து மகத்தான சேவை செய்து வருகிறார் உறுமத்தான்” என்று மதுரை காந்தி அருங்காட்சியகச் செயலாளர் திரு. மா.பா. குருசாமி அவர்கள் பாராட்டினார்கள்.

காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ந. மார்க்கண்டன், திரு. உறுமத்தான் அவர்களின் தொண்டுகளைப் பற்றி விரிவாகப் பேசினார். திரு. உறுமத்தான், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தான் செய்த பணிகளை பிறருக்கு சொல்வதன் மூலம் பல தொண்டர்களை உருவாக்க முடியும் என்று கூறி ஒரு மனிதன் தன் வாழ்நாளில் இவ்வளவு சேவை செய்ய முடியுமா என்பதை பார்க்கும்



பொழுது மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கிறது என்று பாராட்டினார்.

தமிழ்நாடு சர்வோதய மண்டல் தலைவர் திரு. க.மு. நடராஜன், உறுமத்தான் அவர்கள் சர்வோதயத் தலைவர் ஜெகந்நாதன், சுவாமி வித்யானந்த சரஸ்வதி, திருமதி கிருஷ்ணம்மாள் ஆகியோருடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறார். அது மட்டுமல்லாமல் சுத்தானந்த பாரதி, குன்றக்குடி அடிகளார், சுவாமி வித்யானந்த சரஸ்வதி ஆகியவர்களிடமிருந்தும் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை மார்கரட் நிவேதிதா அவர்களின் மார்கரட் விருது போன்று பல விருதுகளை அவர் பெற்றிருப்பதும் சிறப்பான அம்சம். ஆன்மிக ஞானிகளின் ஆசிர்வாதம் அவருக்கு நிரம்பக் கிடைத்திருக்கிறது என்று கூறினார்.

திரு.சு.கற்பூரசுந்தரபாண்டியன்.I.A.S., (முன்னாள் அரசு செயலாளர்) அவர்களின் உரை :

“திரு.உறுமத்தான் அவர்களை சிலஆண்டுகளுக்கு முன் எனக்குத் தெரியும், ஏழை, எளியோருக்கு உதவுவதில் முதன்மையாக செயல்பட்டிருக்கிறார். தன் வாழ்க்கையைத் தனக்காக வாழவேண்டும் என்று நினைக்காமல், பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவர் பலரால் பாராட்டப்படுவார் என்பதற்கு திரு.அ.உறுமத்தான் அவர்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் நடத்திய ஆடுவளர்ப்பு கூட்டுறவுசங்கம் 1988-ல் மாநில அளவில் முதற்பரிசைப் பெற்றுள்ளது. இது ஒரு அரிய வாய்ப்பாகும்.”


“தமராக்கியில் நாற்பது அரிசனங்களுக்கு விஷம் கலந்த வரகு சாப்பிட்டதில் வாந்தியும், மயக்கமும் ஏற்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போது, சிவகங்கைக்கு திரு.உறுமத்தான் அவர்கள் டாக்டரை அழைக்க வந்தபோது டாக்டரும், R.D.O.வும் சினிமாவுக்குப் போய்விட்டார்கள். இரவு 9.00மணிக்கு டாக்டர் கிடைக்காததால் R.D.O.வுக்கும், கலெக்டருக்கும் எக்ஸ்பிரஸ் தந்தி கொடுக்கப்பட்டது.

தந்தியைச் சினிமாக் கொட்டகையில் கொடுத்தார்கள். டாக்டரைத் தேடி R.D.O. அவர் வீடு இருந்த ஓவர்சுபிள்ளைத் தெருவுக்கு வந்துவிட்டார். திரு.உறுமத்தான் அவர்களும் டாக்டர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார். எனது அண்ணன், டாக்டர் பிறையணிந்த சீமான் அவர்கள் தனது காரில் தமராக்கி வந்து இரவு 10.00 மணியளவில் பாண்டடை மடித்துவிட்டுக் கொண்டு கால்வாயைக் கடந்து பாதிக்கப்பட்ட அரிசனங்களையும் நேரில் பார்வையிட்டு மருத்துவ சிகிச்சைக்கு R.D.O. ஏற்பாடு செய்தார். கீழப்பூங்குடி, மதுரை ஆஸ்பத்திரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களைக் காப்பாற்ற ஏற்பாடு செய்து முதலுதவி சிகிச்சையாக அங்கேயே அவர்களுக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. ஒரு மாதம் சிகிச்சை பெற்றார்கள் என்பது புத்தகத்திலிருந்து தெரிய வந்தது. இத்தகைய இவரது அரிய பணியை எவராலும் செய்ய முடியாது.

“நான் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபோது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருவழி ஜனரேஷன் தமராக்கி ஆடு வளர்க்கும் கூட்டுறவு சங்கத்தில் இருப்பதாகத் தெரிந்தது. அப்போதைய மார்க்கெட் ரேட் ரூ.35க்குப் பதிலாக அதிக விலை கொடுத்து ரூ.70 கொடுத்து வாங்கப்பட்டன. இதனால் ஆடுவளர்ப்போரின் பொருளாதார நிலையும் வாழ்க்கைத்தரமும் உயர்ந்ததற்கு திரு.உறுமத்தான் அவர்களே காரணம்.”

திரு. உறுமத்தான் அவர்கள், தன்னுடைய ஏற்புரையில், இந்தப் பாராட்டுதல்கள் எனக்காகவும், எனது இயல்பான பணிகளுக்காகவும் கிடைத்த ஒரு மாபெரும் அங்கீகாரம் என்று கூறினார்.

விழாவின் இறுதியில் குன்றக்குடி அடிகளார் விழாக்குழுவினருக்கும், இறைவணக்கம் பாடிய செல்வி சுகன்யாவுக்கும், பரதநாட்டியம் ஆடிய செல்விக்கும் பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்தார். சிவகங்கை முன்னாள்



நகர்மன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் கணபதி, திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், முன்னாள் மத்திய நிதி மற்றும் உள்துறை அமைச்சரின் புதல்வராகிய திரு. பா. கார்த்திக் சிதம்பரம், சோளபுரம் சுத்தானந்த யோக சமாஜத் தலைவர் திரு.ரெ.வெங்கடகிருஷ்ணன் ஆகியோரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். இந்த விழாவில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், திரு.வி.ராஜசேகரன், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.கே.ஆர்.முருகானந்தம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டனர்.

சிவகங்கை இளைய மன்னர் திரு.R. மகேஷ்துரை, சோழபுரம் சுத்தானந்த யோக சமாஸத்தின் தலைவர் திரு.R.வேங்கடகிருஷ்ணன், சிவகங்கை மன்னர் கல்வி நிறுவனங்களின் செயலாளர் திரு.V.S. குமரகுரு, மதுரை காந்திய சிந்தனைக் கல்லூரி முதல்வர் பேராசிரியை சு.முத்துலெட்சுமி, சிவகங்கையின் மூத்த வழக்கறிஞர்கள் திரு.M.மோகனசுந்தரம், திரு.சி.இளங்கோவன், திரு.S.இன்பலாதன், கால்நடை பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநராகப் பணியாற்றி, பணி நிறைவு பெற்ற டாக்டர் மு.பாலசந்திரன், சிவகங்கை அரசு மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றிய டாக்டர் ஜெயாமகாதேவன், கூட்டுறவுத் துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்ற திரு.ஆ.மங்கேஸ்வரன், சிவகங்கை L.I.C. வளர்ச்சி அதிகாரி (பணிநிறைவு) திரு.P.இராமச்சந்திரன், சத்யா லாட்ஜ் உரிமையாளர் திரு.A.முத்துக்கண்ணன், சிவகங்கை நகர் வர்த்தக சங்கத் தலைவர் திரு.S.அறிவுத்திலகம், S.T.இராஜேந்திரன் (தமிழ்நாடு சர்வோதய சங்க செயலாளர்), சு.சுப்பிரமணியன் செயலாளர் (தமிழ்நாடு காந்தி நிதி), சிராவயல் காந்தி சேவா சங்கத் தலைவர் திரு.S.திருநாவுக்கரசு மற்றும் பல முக்கியப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை விழாக்குழுத் தலைவர் பேராசிரியர் நா.தர்மராஜன், துணைத் தலைவர்கள் திரு.சோ.இராமகிருஷ்ணன், திரு.V.தங்கமணி, செயலாளர்கள் திரு.K.ஜவகர், திரு.S.வினோபா, பொருளாளர் திரு.R.மகேஸ்வரன், ஒருங்கிணைப்பாளர்கள் திரு.சஞ்சய் கணபதி.Ex.Mc., டாக்டர்.உ.மோகன்தாஸ், திரு கை.கணபதி, செய்தியாளர் திரு.K.R.வைத்தியநாதன், உறுப்பினர்கள், வரலாற்று ஆசிரியர் திரு.M.பாலகிருஷ்ணன், தேசிய நல்லாசிரியர் திரு.S.கண்ணப்பன், மருதுபாண்டியர் வரலாற்று நூலாசிரியர் திரு.G.மாரி, இடையமேலூர் Ex.ஒன்றியசேர்மன் திரு.C.சந்திரன், திரு.S.சிவராமன் EB.(Rtd.,) திரு.A.அனந்தராமன் (I.O.B. Rtd) R.சையது இப்ராஹிம், திரு.M.S.P. சிவராமகிருஷ்ணன் E.B. (Retd.) பிரபல திரைப்பட இயக்குநர் திரு.R.வேல்ராஜ், செய்தியாளர் திரு.S.சீனிவாசன், கலைமகள் ஓவியர் திரு.N.முத்துக்கிருஷ்ணன், திரு.P.கோவிந்தராஜ் (I.O.B. Rtd.) சிவகங்கை மலைராமன் ஹோட்டல் உரிமையாளர் திரு.இரா.பாண்டிவேல், திரு.V.வெங்கட்ராமன், திரு.S.கஸ்பார், திரு.M.ஆப்ரஹாம், திரு.K.பொன்னையா, வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

விழா முடிந்தவுடன் வெளியே வந்தபொழுது, இராஜபாளையத்திலிருந்து வந்திருந்த சர்வோதய அன்பர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு தனி நபருக்கு இவ்வளவு சிறப்பாக பாராட்டு விழா நடைபெற்றதை இப்போதுதான் நான் பார்த்து அதிசயிக்கிறேன் என்று நிறைந்த மனத்துடன் வாழ்த்தினார். இராஜபாளையத்தில் எத்தனையோ பாராட்டு விழாக்களை பார்த்தவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ●